செய்வதில் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறு நடைமுறையில் இட ஒதுக்கீடு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருமாவளவன், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 68, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

68—

திருக்கோயில் கும்பாபிஷேகம்

***1032—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, திருமலைக்குமாரசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக்குமாரசாமி திருக்கோயிலில் 17 திருப்பணி வேலைகளுக்கு ரூ.34.50 இலட்சத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முன்னாள் திருக்கோயில் நிர்வாக வாரியத்தால் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயில் திருப்பணி வேலைகளில் 50% பணி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளை முடிக்க போதிய நிதி வசதியின்மையால் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படித் திருக்கோயிலுக்குப் புதியதாக திருப்பணிக் குழு அமைத்து பொதுமக்களிடம் நன்கொடை வசூலித்தும், உபயதாரர்களைக் கொண்டும் திருப்பணி வேலைகளை முடித்து திருக்குடமுழுக்கு நடத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சுப்பையா பாண்டியன், இருக்கையில் இல்லை.